(ஈ) கடலூர், பண்ருட்டி தொகுதி, வீரப்பெருமாநல்லூர் கிராமம், இடிதாக்கி இறந்த மூன்று சிறுவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் கடலூர் மாவட்டம், என்னுடைய பண்ருட்டி தொகுதியில் உள்ளடங்கிய வீரப்பெருமாநல்லூர் என்னும் கிராமத்தில் இடி தாக்கியதில் மூன்று சிறுவர்கள், பள்ளிக் குழந்தைகள் வீரமணி—வயது 15, சதீஷ்—வயது 10, முத்துராஜ்—வயது 15 ஆகியோர் அகால மரணம் அடைந்திருக்கிறார்கள். இந்தச் செய்தி நேற்றையதினம் அவையில் இருக்கின்றபோதே வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை இந்த அவையின்மூலமாக ஈர்த்து, என்னுடைய பண்ருட்டி தொகுதி வீரப்பெருமாநல்லூர் கிராமத்தில் இடிதாக்கி உயிரை நீத்த அந்தப் பள்ளிச் சிறுவர்கள், மூன்று குழந்தைகளின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நல்லதொரு நிதியினை வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிடவேண்டும் என்று இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

(உ) பன்னாட்டுத் தொழில் நிறுவனத் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் அமைக்க அனுமதி அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

***செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு சட்டமன்றக் கூட்டத்தொடரில் தமிழகத்தில் இருக்கக்கூடிய பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களில் தொழிற்சங்கங்களை அங்கீகரிக்கக்கூடிய வகையில் ஒரு சட்டம் கொண்டு வருவதற்கான ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை தங்களிடம் வழங்கியிருக்கின்றோம். அதுகுறித்துப் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.